புதுவை மக்களின்

# குற்றப்பத்திரிக்கை

## காங்கிரஸ் திமுக ஆட்சி

## புதுவையே குட்டிச்சுவராச்சு





Printed by: Sri Lakshmi Cards | Phone: 75581 89830 | No. of copies: 5000

புதுச்சேரி மக்கள் 5 வருடங்களுக்கு முன்பு காங்கிரஸ் கட்சி, ஆட்சி அமைப்பதற்கான ஒரு வாய்ப்பினை கொடுத்தனர். ஆனால், அந்த அரசு மக்களின் நம்பிக்கைக்கு புறம்பாக திறமையற்ற, தவறான மற்றும் மோசமான ஆட்சியையே மக்களுக்கு பரிசாக அளித்தனர்.

மேலும், அனைத்து துறைகளிலும் தோல்வியை தழுவிய பயனற்ற ஓர் ஆட்சியை வெளிப்படுத்தும் விதமாகவே காங்கிரஸ் கட்சியின் அரசாங்கம் செயல்பட்டது.

ஊழல் செய்வதிலும், தங்கள் பாக்கெட்டுகளை நிரப்பிக் கொள்வதிலும் குறியாக இருந்தது திரு. நாராயணசாமி தலைமையிலான காங்கிரஸ்-திமுக அரசு.

மத்தியில் பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், புதுச்சேரியின் மேம்பாட்டிற்காகவும், வளர்ச்சிக்காகவும் வழங்கிய பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்த தவறிவிட்டது காங்கிரஸ்-திமுக அரசு.




**2016 ஆம் ஆண்டு காங்கிரஸ்-திமுக தேர்தல் அறிக்கையில் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றத் தவறிய ஓர் அரசாகும்.**

- அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் 30 கிலோ அரிசியும், 5 கிலோ கோதுமையும் இலவசமாக வழங்கப்படும் என்று காங்கிரஸ்-திமுக அரசு வாக்குறுதி அளித்தது. ஆனால், அது நிறைவேற்றப்படவேயில்லை.
- SC-பட்டியலின மக்களுக்கு வீடு கட்ட ₹5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்தது காங்கிரஸ்-திமுக அரசு. ஆனால், அது வழங்கப்படவே இல்லை.
- வீட்டுக்கொருவருக்கு அரசு வேலை வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்தது காங்கிரஸ்-திமுக அரசு. செய்தார்களா? யாருக்காவது வேலை கிடைத்ததா?
- நகரம் மற்றும் கிராமப்புறங்களில் மருந்தகங்கள் நிறுவப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியது காங்கிரஸ்-திமுக அரசு.
- உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% ஒதுக்கீடு வழங்கப்படும் என்று கூறியது நிறைவேற்றப்படவில்லை. மேலும், உச்சநீதிமன்ற அறிவுறுத்தலுக்குப் பிறகும், உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படவில்லை.



- மின்சார கட்டணம் 50% குறைக்கப்படும் என்றார்கள். ஆனால், அதற்கு மாறாக மின்சார கட்டணம் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரி சேர்க்கையில் 50% அரசு இடஒதுக்கீடு கிடைக்கும் என்று உறுதியளித்தனர். ஆனால், இதில் மிகப்பெரிய ஊழல் முறைகேடு நடைபெற்று உயர்நீதிமன்றம் மற்றும் சிபிஐ தலையீட்டின் காரணமாக சட்டவிரோத மாணவர் சேர்க்கை தடுக்கப்பட்டு முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட்டனர்.
- மத்திய அரசின் ஊதியக் குழு திட்டங்கள் மற்றும் பரிந்துரைகள் புதுச்சேரி மாநில அரசு ஊழியர்களுக்கு அமல்படுத்தப்படவில்லை.
- காவல்துறை நவீனமயமாக்கப்படும் என்ற வாக்குறுதியை காங்கிரஸ்-திமுக அரசு நிறைவேற்றவில்லை.
- ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்திற்குள் தொழில்நுட்ப பூங்கா (IT Park) நிறுவப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.
- மாநிலம் முழுவதும் காலியாக உள்ள அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.
- சுதந்திர போராட்ட தியாகிகள், முதியோர் மற்றும் ஊனமுற்றோருக்கான மாதாந்திர உதவித் தொகை உயர்த்தி தரப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றினார்களா?
- காங்கிரஸ்-திமுக கூட்டணி அரசு பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை அளிப்பதாக கூறிய வாக்குறுதியை முற்றிலும் மறந்துவிட்டது.
- விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு திட்டம் வழங்கப்படும் என்று அறிவித்ததை செய்தார்களா?
- புதுவையில் உள்ள மாணவர்களுக்கு இலவச உயர்கல்வி அளிக்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற காங்கிரஸ் அரசு தவறியது.
- இலவச செட்டாப் பாக்ஸ் மற்றும் மாதந்தோறும் சீரான கேபிள் டிவி கட்டணம் பெறப்படும் என்ற வாக்குறுதியையும் செயல்படுத்தவில்லை.
- காங்கிரஸ் அரசு குண்டர் சட்டத்தின் மூலம் சமூக விரோதிகளை அடக்குவதாக கூறிய வாக்குறுதியை செயல்படுத்தினார்களா?
- ஒவ்வொரு கொம்யூனிலும் விளையாட்டு நலவாரியம் மற்றும் மைதானங்கள் அமைத்து தருவதாக கொடுத்த வாக்குறுதியை காங்கிரஸ் அரசு செய்ய தவறியது.
- தனியார் பள்ளிகளில் கல்விக் கட்டணங்களை சீரமைக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை.
- சிறுபான்மையினர் நல வாரியம் அமைக்கப்படும் என்ற வாக்குறுதியையும் காங்கிரஸ் அரசு பொருட்படுத்தவில்லை.
- 2016 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையாக காங்கிரஸ் கட்சி அளித்த 72 வாக்குறுதிகளில், 52 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

## 1 புதுச்சேரியில் ஊழல் ஆட்சிக்கு வழிவகுத்த காங்கிரஸ்-திமுக ஆட்சி

- புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி மற்றும் அவரது மகன் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகினர்.
- SC மக்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, முறைகேடாக ஹைமாஸ்ட் எனப்படும் உயர் மின்கோபுரங்கள் அமைக்க பயன்படுத்தப்பட்டது.
- புதுச்சேரி மக்களின் மேம்பாட்டிற்காக திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு வழங்கிய சுமார் 15 ஆயிரம் கோடி ரூபாய் நிதி பொது மக்களுக்கு சென்று சேரவில்லை.
  - ஆதரவற்ற பெண்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதிய/உதவித்தொகை திட்டம்
  - இலவச வேட்டி சேலை திட்டம்
  - முதலமைச்சர் நிவாரண நிதி
  - புதுச்சேரியில் சொகுசு கார்களின் வாகனப் பதிவு
  - சுற்றுலா துறைக்கு வாங்கப்பட்ட படகு வீடுகள் உள்ளிட்ட அனைத்திலும் ஊழல் என பரவலாக முறைகேடு மற்றும் ஊழல் மலிந்த அரசாகவே இருந்தது காங்கிரஸ் ஆட்சி.
- புதுச்சேரியில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில், புதுச்சேரி மாணவர்களுக்கான அரசு இடஒதுக்கீட்டின் 50% MBBS சீட்டுகளை பெற தவறியது. மேலும், மாணவர் சேர்க்கையில் மோசமான முறைகேடுகளும் அரங்கேறின.
- மேலும், மாஹி துறைமுகப் பணியில் நிதி முறைகேடு, கேபிள் டிவி வரி வருமானத்தில் முறைகேடு, மதுக்கடைகளை குத்தகைக்கு விட்டதில் முறைகேடு என ஊழல் பட்டியல் நீள்கிறது.

## 2 காங்கிரஸ்-திமுக அரசால் புறக்கணிக்கப்பட்ட புதுச்சேரி இளைஞர்கள்

- நாட்டிலேயே வேலைவாய்ப்பு இல்லாத மாநிலங்களின் பட்டியலில் புதுச்சேரி முன்னிலையில் உள்ளது. புதுச்சேரி இளைஞர்களில் 75% பேர் வேலையில்லாமல் உள்ளனர்.
- புதுச்சேரி இளைஞர்களை போதை பழக்க அச்சுறுத்தலுக்கு அடிமையாகாமல் தடுப்பதில் இருந்து மாநில அரசு முற்றிலும் தோல்வியடைந்துவிட்டது. மாநிலத்தில் போதைப் பொருட்களின் புழக்கத்தை கட்டுப்படுத்த தவறியதால், பள்ளி மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

3

## புதுச்சேரியின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியை புறக்கணித்த காங்கிரஸ்-திமுக அரசு

- ரேஷன் கடைகள் அனைத்தும் மூடப்பட்டதால், புதுச்சேரியில் பொது விநியோக சேவைத் துறை காணாமல் போனது. பொது மக்களிடம் ரேஷன் கார்டுகள் இருந்தும், ரேஷன் கடைகள் செயல்படாமல் இருந்தன.
- மத்திய அரசு திட்டங்களான ஆயுஷ்மான் பாரத் திட்டம், ஏழை, எளிய மக்களுக்கான மருத்துவ காப்பீடு திட்டம் உள்ளிட்டவைகளில் ஊழல் செய்து பணம் சம்பாதிக்க முடியாததால், நாராயணசாமியின் அரசு, இந்த திட்டங்களை புதுச்சேரியில் அமல்படுத்தவில்லை.
- மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண நிதியுதவி திட்டத்தில் பல்வேறு கடுமையான விதிமுறைகளை புகுத்தி செயல்படுத்தியதால், நிவாரணம் பெறுவதில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் மிகுந்த துன்புறுத்தலுக்கு ஆளாகினர்.
- AFT-ரோடியர் மில், பாரதி மில், சுதேசி மில் உள்ளிட்ட மாநிலத்தின் வேறு பல மில்களும் மூடப்பட்டதால், ஆயிரக்கணக்கானவர்கள் வேலை இழந்தனர்.
- புதுச்சேரியில் உள்ள ஆறு, குளம் மற்றும் ஏரிகள் அனைத்தும் வறண்டுள்ளன. எனவே, இவை அனைத்தும் தூர்வாரப்பட்டு மறுசீரமைப்பு செய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளன.
- புதுச்சேரிக்கு மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட பேருந்துகள் இயக்கப்படாமல் உள்ளன.
- மாநில அரசின் கடுமையான வரி விதிப்பால் புதுச்சேரியில் உள்ள தொழிற்பேட்டைகள் மூடப்பட்டுள்ளன.
- மோசமான நிலையில் குண்டும் குழியுமாக உள்ள சாலைகள் விபத்து கேந்திரங்களாக மாறி, உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.
- தவறான நிர்வாகம் மற்றும் ஒழுங்கற்ற போக்குவரத்தால் நகரம் முழுவதும் மக்கள் கடும் போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிக்கின்றனர்.
- மாநில அரசின் மோசமான பராமரிப்பு மற்றும் புறக்கணிப்பால், புதுச்சேரியின் பெரும்பாலான பாரம்பரிய மரபு சின்னங்கள், தலங்கள், தங்களின் புகழ் மற்றும் பொலிவை இழந்து காணப்படுகின்றன,
- சுத்தம் செய்வதில் உள்ள குறைபாடு மற்றும் பாதுகாப்பற்ற வழிகளில் குப்பைகளை அகற்றுவதால் புதுச்சேரி மிக மோசமான அருவருக்கத்தக்க நிலையில் காணப்படுகிறது.

## 4 காங்கிரஸ்-திமுக அரசால் துயரம் மற்றும் இன்னலுக்கு ஆளான புதுச்சேரி அரசு ஊழியர்கள்

- புதுச்சேரியில் உள்ள மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளம் உரிய நேரத்தில் வழங்கப்படவில்லை.
- ரேஷன் கடைகள் மூடப்பட்டதால் பெரும்பான்மையான அரசு ஊழியர்கள் வருமானத்திற்கான வழியை இழந்து தவிக்கின்றனர்.

## 5 மகளிர் நலனில் அக்கறையில்லாத காங்கிரஸ்-திமுக அரசு

- சட்டம் ஒழுங்கு சீர்கேட்டால் புதுச்சேரியில் பெண்களின் நிலை பாதுகாப்பற்ற சூழலில் உள்ளது.
- புதுச்சேரி அரசுப் பதவிகளில் பெண்களுக்கு உரிய பங்கு மற்றும் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

## 6 காங்கிரஸ்-திமுக அரசின் ஜனநாயக விரோதத்தன்மை

- மத்திய அரசின் திட்டங்களை புதுச்சேரியில் திறம்பட்ட முறையில் செயல்படுத்த மாநில அரசு அனுமதிக்கவில்லை.
- மத்திய அரசு புதுவைக்காக அளித்த 15 ஆயிரம் கோடி ரூபாய் நிதி மாநில மக்களை சென்று சேரவில்லை.
- 2018 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும், புதுச்சேரியில் உள்ளாட்சி தேர்தல் நடைபெறாததற்கு மாநில அரசே முழுப் பொறுப்பு. வளர்ச்சிக்கான நிதியை செலவிடுவதில் மாநில மக்களின் பங்களிப்பு மற்றும் தீர்மானத்தை காங்கிரஸ் அரசு விரும்பாததே இதற்கு காரணம்.

# மாற்றத்திற்கான நேரம்.

# புதுவையில் மக்களின் ஆட்சிக்கான நேரம்.

## மத்தியில் மோடி ஆட்சி

## மாநிலத்தில் NDA கூட்டணி ஆட்சி

## புதுச்சேரிக்கு மறுமலர்ச்சி!

புதுச்சேரி மக்கள் தன்னலமிக்க மற்றும் வாரிசு வம்சாவழி காங்கிரஸ்-திமுக அரசை போதிய அளவு பார்த்துவிட்டனர். புதுச்சேரியில் மக்களை தலைமையாக மையமாக கொண்ட ஓர் அரசை காண ஏங்கித் தவிக்கிறார்கள். அவர்கள் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள். புதுச்சேரியை வளர்ச்சி மற்றும் முன்னேற்றப் பாதையில் வழிநடத்த ஒரு தூய்மையான மற்றும் திறமையான ஆட்சியை வழங்க உறுதியளிக்கும் ஓர் அரசாங்கத்தை மக்கள் விரும்புகிறார்கள்.

இம்முறை பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான NDA-தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் BEST புதுச்சேரி தொலைநோக்கு பார்வையை கொண்ட ஓர் அரசு புதுச்சேரியில் அமைய மக்கள் விரும்புகின்றனர். புதுச்சேரி வர்த்தகத்தில் சிறந்து விளங்க, கல்வியில் சிறந்து விளங்க, ஆன்மிகத்தில் சிறந்து விளங்க, சுற்றுலா மற்றும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்க தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி புதுவையில் மலர புதுச்சேரி மக்கள் இம்முறை விரும்புகின்றனர்.

## #BESTPuducherry



# வாக்களிப்பீர் பாஜக

## #BESTPuducherry

பாஜக

**மலரட்டும் தாமரை!**

**ஒளிரட்டும் புதுச்சேரி!**

@BJP4Puducherry

வாக்களிப்பீர் **BJP**

Issued by **BJP, Puducherry**

Printed by: Sri Lakshmi Cards | Phone: 75581 89830 | No. of copies: 5000